MUNICIPAL COUNCIL
JAFFNA

Registered as a Newspaper

கலர் பிலிம் கருள்கள்
கூடிய விரைவில் கழுவிக்
Proccessing & Printing)
கொள்வதற்கு
ஞானம்ஸ்
ஸ்ரூடியோ
போஸ்காட் பிரதி ஒன்று
ரூ 5 75
நெகடிவ் ஆக்குவதற்கு
(Proccessing) இலவசம்!
301, Clock Tower Road,
JAFFNA. TPhone: 23067

# உதயன்

விலை ரூ.1/-

யாழ். நகரில்
தரமான
போட்டோ ஸ்ரற்
பிரதிக்கு
ஞானம்ஸ்
ஸ்ரூடியோ
301, Clock Tower Road
JAFFNA
T'Phone: 23067

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

மலர்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு வைகாசி 25 ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 ரம்ழான் பிறை 29 (08-06 1986) UTHAYAN- A LIVELY TAMIL DAILY இதழ்: 172

# தமிழ் இளைஞர்கள் உண்ணாவிரதத்தை கைவிட மறுப்பு

## பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் குழுவின் முயற்சி தோல்வி

கொழும்பு, ஜூன் 8

வெலிக்கடைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களை பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் குழு ஒன்று நேற்றுச் சந்தித்தது. உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு குழு கேட்டது.

தமது இரண்டு கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நிறுத்தப்போவதில்லை என்று அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்தார்கள். அதாவது உண்ணாவிரதத்தைக் கைவிட மறுத்து விட்டார்கள் எனறு அறிய வந்தது.

உண்ணாவிரதம் இருக்கும் பலரின் தேகநிலை கவலைக்கிடமாகி வருவதைத் தொடர்ந்து, உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டுவரப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் குழு சிறைச்சாலைக்கு விஜயம் செய்ததாகத் தெரிய வந்தது.

ஹென்றி பெரேரா என்ற சிங்கள இளைஞர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார்

எனினும் அவர் அரசியல் கைதிகளுக்கு உரிய சிறைப்பகுதியில் வைக்கப்படாமல் சாதாரண குற்றக் கைதிகள் பகுதியில் வைக்கப்பட்டார். அவரது உடல் நிலை சரியில்லாததால் சாதாரண கைதிகளின் வைத்திய சிகிச்சை நிலையத்திலேயே வைக்கப்பட்டார்.

திரு. ஹென்றி பெரேராவை அரசியல் கைதிகளுக்குரிய பகுதிக்கு மாற்றுமாறு கோரியே தமிழ் இளைஞர்கள் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினர்.

அவர்கள் உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்து நேற்றுடன் பதினைந்து நாட்கள் ஆகிவிட்டன. வெள்ளிக்கிழமை வரை பலரின் தேக நிலை உயிர் ஆபத்தான கட்டத்துக்கு வந்துவிட்டதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

அதனைத் தொடர்ந்தே பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் நேற்று உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டு வர முயற்சித்தனர்.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை உண்ணாவிரதத்தைக் கைவிடப் போவதில்லை என்று தமிழ் இளைஞர்கள் உறுதியாகத் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

அதிகாரிகள் அளிக்கும் உறுதிமொழி எதையும் தாம் நம்பி ஏற்கப் போவதில்லை என்றும் காரியம் நடந்த பின்பே தாம் உண்ணாவிரதத்தைக் கைவிட முடியும் எனவும் அவர்கள் தெரிவித்தனராம்

உயிர் ஆபத்தான கட்டத்தை அடைந்துள்ளவர்களின் சரியான எண்ணிக்கையையோ பெயர் விவரங்களையோ வெளியிட அரசாங்க வட்டாரங்கள் மறுத்து விட்டன. (அ—5)

## ஊர்காவல் படைக்கு வாக்கி டோக்கி

கொழும்பு, ஜூன் 8

ஊர்காவல் படையினருக்கு வாக்கி-டோக்கி சாதனங்கள், தடுப்புக் கேடயங்கள் முதலியவற்றை வழங்குவதுபற்றி உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

இந்த சாதனங்களை வழங்குவது புத்திசாலித்தனமான நடவடிக்கையாக இருக்குமா? என்பது பற்றியே அமைச்சு அதிகாரிகள் தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் ஏராளமான ஊர்காவல்படைகள் அமைக்கப்பட்டுள்ளன

இதற்கிடையில் கொழும்பு மாநகரிலும் ஊர்காவல் படைகள் அமைக்கப்படவுள்ளன.

600ஊர்காவல்படை வீரர்கள் இதற்காகச் சேர்க்கப்படவுள்ளனர்.

கொழும்பில் உள்ள பொலீஸ் நிலையங்களின் பொறுப்பு அதிகாரிகளுக்குஇதற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆண்களும் பெண்களும் இப்படிச் சேர்க்கப்படுவர். 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக அவர்கள் இருக்க வேண்டும் ஆண்கள் 5அடி 4 அங்குல உயரமும் பெண்கள் 5 அடி 2 அங்குலமும் இருக்க வேண்டும். (இ-எ)

# கிளிநொச்சியில் நேற்றும் தொடர்ந்து ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 8

கிளிநொச்சி நகரில் நேற்றும் 'ஷெல்' தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் மூன்று பேர் கொலையுண்டிருக்கலாம் என அஞ்சப்பட்டது ஐந்து பேர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை சுமார் எட்டுமணியளவில் கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் கனகபுரம் மகா வித்தியாலயம் வரை முன்னேறிச் சென்றனர்.

இவர்கள் வருகையை எதிர்கொண்ட போராளிகள் நவீன ரக ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் நடத்தினர்.

அதன்பின்னர் சிப்பாய்கள் முகாமிற்குத் திரும்பிச் சென்றனர்.

அதனைத் தொடர்ந்து முகாமிலிருந்து கரடிப்போக்கு,கனகபுரம் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் கரடிப்போக்கு சந்திக்கு அண்மையில் வந்து கொண்டிருந்த மூவர் கொலையுண்டிருக்கலாம் எனத் தெரியவருகிறது

இவர்களில் ஒருவர் சிறுவன் எனவும் மற்றவர்கள் பெண்கள் எனவும் தெரியவருகிறது

இதே இடத்தில் மேலும் மூன்றுபேர் காயமடைந்துள்ளனர்.

### ஹெலி வந்தது

இதே வேளை நேற்றும் கிளிநொச்சி நகரத்தில் ஹெலிக்கொப்டர் பறந்து திரிந்ததாகவும் இடையிடையே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் தெரிய வருகிறது.

கிளிநொச்சி, கனகபுரம் தர்மபுரம், உருத்திரபுரம் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான மக்கள் நேற்றும் இடம்பெயர்ந்து கொண்டிருப்பதாக அறிய வந்தது.

கடந்த மூன்று நாட்களாக கிளிநொச்சியில் நடைபெற்ற குண்டுத் தாக்குதல்களின்போது நாற்பது வீடுகளும் பத்துக்கு மேற்பட்ட கடைகளும் சேதமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கனகபுரம் பகுதியில் இருந்து இறந்த ஒருவரின் சடலத்தைமாட்டுவண்டியில் ஏற்றிச் சென்ற பொழுது மாட்டுவண்டியிலும் ஷெல் குண்டு விழுந்தது

இச்சம்பவத்தினால் ஒருவர் காயமடைந்தார். ஒரு மாடும் இறந்து விட்டது.

கிளிநொச்சி சம்பவங்களில் காயமடைந்த பொது மக்களில் இது வரை சுமார் இருபது பேர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று யாழ்ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தோர் விவரம் வருமாறு;

மிக்லோன் வேதநாயகம் (23 வயது) திருநகர், செல்லையா இராசதுரை (30 வயது) விஜயகபுரம் என். ஜெயசிலன் (23 வயது) கிளிநொச்சி, கணபதிப்பிள்ளை அரிச்சந்திரன் (16 வயது) திருநகர், முத்துக்குமாரு சிதம்பரம் (13 வயது) கிளிநொச்சி, ஐயாக்கண்ணு அருச்சுனன் (28 வயது) கிளிநொச்சி, எம். நல்லையா (52 வயது) கிளிநொச்சி

மிச்சந்தி மேளம்



அப்ப, எங்கடை தம்பிமாருக்கு கொஞ்சம் அதிஷ்டம் அடிக்கப் போகுது எண்டு சொல்லுங்கோ.

# பொம்மர் விமானங்கள்

## குண்டு பொழிய விரல்கள் சிதறிய நிலையில் உயிர் தப்பி வந்த பெண்

யாழ்ப்பாணம், ஜூன்8

ஷெல் தாக்குதலினால் கையிலும் காலிலும் விரல்கள் சிதறிய எனது மருமகள் சந்திரபாமினியைக் கூட்டிக்கொண்டு பொம்மர் விமானங்களின் குண்டு மாரியின் மத்தியில்தப்பிவந்தோம்.

கனகபுரம் கோழிப் பண்ணையைச் சேர்ந்த திருமதி விமலாதேவி தருமநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

உதயன் செய்தியாளரிடம் அவர் தெரிவித்ததாவது:-

சம்பவதினம் கனகபுரத்தில் வீடு ஒன்றின் முன்னால் நின்றுகொண்டிருந்தோம்.

கனகபுரம் பகுதியை நோக்கி கிளிநொச்சி நகரில் இருந்து ஷெல் குண்டுகள் சிறிக்கொண்டு பறந்து வந்தன.

பயம் காரணமாக எனது மருமகள் சந்திரபாமினியும் வேறு ஒருவரும் அடுத்த வீட்டு வளவுக்குள் மறைவிடத்தை நோக்கி ஓடிக் கொண்டிருந்தனர்.

திடீரென வெடிச்சத்தம் ஒன்று கேட்டது.

அதனை அடுத்து ஒருவர் ஓடிவந்து மருமகள் வெடிபட்டு விழுந்து விட்டார் என்று சொன்னார்.

தொடர்ந்தும் அயல் பக்கங்களில் ஷெல்கள் விழுந்து வெடித்த வண்ணம் இருந்தன.

படுகாயமடைந்த மருமகளை கிராமப் பகுதியில் ஒரு தனியார் வைத்தியரிடம் கொண்டு சென்றோம்.

முதலுதவி அளித்த வைத்தியர், யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகும்படி ஆலோசனை கூறினார்.

அடுத்தநாள் காலை யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வருவதற்காக வானொன்றில் புறப்பட்டோம்.

அப்பொழுதும் பொம்மர் விமானங்கள் சுழன்றடித்து குண்டுகள் போடுவது தெரிந்தது.

எனினும் சாரதி வானை மரங்களுக்கு கீழ் நிறுத்தியும் காடுகளுக்குள் மறைத்தும் பலத்த சிரமத்தின் மத்தியில் பூநகரி காட்டுப் பாதையூடாக யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்து சேர்த்தார்

இப்படி அவர் தெரிவித்தார்

(இ—10)

# கருவாடும் நிறுத்தம்

கொழும்பு, ஜூன் 8

பாதுகாப்புக் காரணங்களுக்காக வடபகுதியில் இருந்து கருவாடு வாங்குவதை சந்தைப்படுத்தும் இணைக்களம் நிறுத்தியுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை 10,000 கிலோ கருவாட்டை தனியார் வான்கள்மூலம் வடபகுதியில் இருந்து சந்தைப்படுத்தும் இணைக்களம் வாங்கி வந்தது.

இன்றைய சூழ்நிலையில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டு பொருள்களுடன் வந்த லொறி தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜூன். 8

வெளிநாட்டுப் பொருள்களுடன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த லொறி ஒன்று ஆனையிறவு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் பற்றி அறியவருவதாவது;-

கடந்த புதன்கிழமை கொழும்பிலிருந்து வெளிநாட்டுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு யாழ்நகர் நோக்கி வந்து கொண்டிருந்தது "சேவ்ரி" நிறுவனத்திற்குச் சொந்தமான லொறி ஒன்று.

கிளிநொச்சியில் நடைபெற்ற மோதல்களை அடுத்து முரசுமோட்டை, பரந்தன் வழியாக இந்த லொறி வந்தது.

வெள்ளிக்கிழமை இரவு எட்டு மணி அளவில் ஆனையிறவு முகாமை லொறி அண்மித்ததும் வழமையான சோதனை நடைபெற்றது

வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் கொண்டு வந்த அல்லது அனுப்பி வைத்த பல பொருள்கள் அந்த லொறியில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் லொறி முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டது.

பொருள்களுக்கு சொந்தமானவர்கள் முகாமுக்கு வந்து தமது பொருள்களை பெற்றுக் கொள்ள வேண்டும் என லொறிச் சாரதியிடமும் கிளினரிடமும் கூறப்பட்டது.

பின்பு சாரதியும், கிளினரும் விடுவிக்கப்பட்டனர்.

(இ—10)

## பொசனை முன்னிட்டு உஷார்

கொழும்பு, ஜூன் 8

பொசன் தினத்தை ஒட்டி அனுராதபுரம், மிஹிந்தலைப் பகுதிகளில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

பொசன் விழா ஜூன் 20 முதல் ஜூன் 22வரை கொண்டாடப்படவுள்ளது.

யாத்திரிகர்களுக்கு பொலீஸாரும் இராணுவமும் பலத்த பாதுகாப்பு வழங்கும்.

இவ்விழாக் காலத்தில் கொழும்பு-அனுராதபுரத்துக்கு இடையே 38 விசேட ரயில்கள் சேவைக்கு விடப்படவுள்ளன.

(இ-எ)

## நாடாளுமன்ற கட்டடத்துக்கு பலத்த பாதுகாப்பு

கொழும்பு, ஜூன் 8

நாடாளுமன்றக் கட்டடத்துக்கும பலத்த பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.

நாடாளுமன்ற அலுவலகத்தில் பணியாற்றுபவர்கள் எல்லாம் கடும் சோதனை செய்யப்பட்ட பின்னரே உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர்.

நாடாளுமன்றக் கன்டீனுக்குக் கொண்டு வரப்படும் மரக்கறி வகைகள், கொட்டப்பட்டுப் பரிசோதனை செய்யப்பட்ட பின்னரே உள்ளே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகின்றன.

உரித்த கோழிகளைக் கூட இரண்டாக வெட்டியே கொண்டுவரவேண்டும் என்று நாடாளுமன்றக் கன்டீனுக்கு உத்தர விடப்பட்டுள்ளது. முழுக் கோழியினுள் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சமே காரணம். (இ-எ)

## சுபநேரம்

8 — 6 — 1986

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:

8·52 முதல் 10·22 வரை

ராகுகாலம்:

4 22 முதல் 5.22 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## நோன்பு நேரம்

| | |
|---|---|
| சஹார் | 4 19 |
| மக்ரிப் | 6·26 |

# வெள்ளி இரவு நகரில் ஏற்பட்ட பதற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

நேற்று முன்தினம் யாழ் கோட்டையிலிருந்து வெளியேற முயன்ற சிப்பாய்களை நோக்கி போராளிகள் தாக்குதல் நடத்தினர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;-

நேற்று முன் தினம் இரவு 9 மணி அளவில் யாழ் கோட்டை முகாமிலிருந்து சிப்பாய்கள் வெளியே வர முயற்சித்தனர்.

இதனை அடுத்து போராளிகள் முகாமை நோக்கி 'ஷெல்' தாக்குதல் நடத்தினர் என்று கூறப்படுகிறது.

இடையிடையே துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

போராளிகளின் தாக்குதலின் பின்னர் முகாமுக்கு திரும்பிய சிப்பாய்கள் நகர்ப்பகுதிகளை நோக்கி அடுத்தடுத்து 'ஷெல்' தாக்குதலை நடத்தினர்.

இதனால் குருக்குத் தெருக்களிலும் கொட்டடிப் பகுதியிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

போராளிகளின் ஷெல் தாக்குதல்களினால் சிப்பாய்கள் தரப்பில் காயம் ஏற்பட்டிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

இரவு 9.30 மணி அளவில் யாழ் நகரை நோக்கி ஹெலிக்கொப்டர் ஒன்றும் பறந்து வந்தது.

அதனை நோக்கியும் போராளிகள் தாக்குதல் நடத்தினர்.

(இ - 10)

## கோயில் வளவில் வெடித்த குண்டு

கொழும்பு, ஜூன் 8

கொச்சிக்கடை சிவன் கோயில் வளவுக்குள் வீசப்பட்ட குண்டு ஒன்று வெடித்ததினால் ஒரு சிறுவன் காயம் அடைந்தான்

கார் ஒன்று சேதமானது இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. (இ-எ)

# ஆஸ்பத்திரியில் சிப்பாய்கள் தேடுதல்

யாழ்ப்பாணம்,ஜூன் 8

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் நேற்று சிப்பாய்கள் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதனால் நோயாளிகள் ஊழியர்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவியது

நேற்றுக்காலை ஆறு மணி அளவில் சிப்பாய்கள் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து தேடுதல் நடவடிக்கையைமேற் கொண்டனர்.

கடந்த மூன்று நாட்களாக கிளிநொச்சியில் நடைபெற்ற சம்பவங்களின்போது காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பொதுமக்கள் பலரை இவர்கள் துருவித் துருவி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# டீசல் இல்லை! வேலைநிறுத்தத்தால் பஸ் சேவைகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ். குடாநாட்டில் நேற்று இ.போ.ச. பஸ் போக்குவரத்துக்கள் ஸ்தம்பித நிலையை அடைந்தன.

டிப்போக்களில் போதியளவு டீசல் இல்லாததே இதற்குக் காரணம்.

கடந்த சில நாட்களாக இராணுவத்தடை முகாம்களில் ஏற்பட்ட கெடுபிடிகள் காரணமாக தனியார் லொறிச் சொந்தக்காரர்கள் தூரப் பயணங்களை நிறுத்திக் கொண்டனர்.

இதனால் வடபிராந்தியத்திற்கான எரிபொருள்களில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஓரிரு இ.போ.ச. பஸ்கள் பட்டும் நேற்று சேவையில் ஈடுபட்டதாயினும் நண்பகலுக்குப்பின்னர் அவைகளும் சேவையை நிறுத்திக் கொண்டன.

இதனால் பாடசாலைச் சேவைகளும் ஸ்தம்பிதம் அடையக்கூடிய அபாய நிலை தோன்றியுள்ளது.

(இ-10)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை அஞ்சலகம், வங்கிக்கிளை ஆகியவற்றில் ஓய்வூதியம்

## அரச அதிபருக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 8
பருத்தித்துறை அஞ்சலகத்திலும் வங்கிக் கிளைகளிலும் ஓய்வூதியம் வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுங்கள்.

பருத்தித்துறை பிரஜைகள் குழு, யாழ் அரச அதிபருக்கு மேற்கண்ட அவசர வேண்டுகோளை விடுத்துள்ளது.

அரசஅதிபருக்கு அனுப்பிய கடிதத்தில் பருத்தித்துறை பிரஜைகள் குழுத்தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் கூறியிருப்பதாவது:

யாழ்கோட்டைப்பகுதி இப்போது பாதுகாப்பான பகுதி என்றுசொல்வதற்கு இல்லை.

சமூகவிரோத சக்திகளின் கொள்கைகளுக்குப் பயந்து யாழ் கோட்டையில் வங்கிக்கிளை, தபால் நிலையக்கிளை 'நிறுவப்பட்டன. இன்று நிலைமை பயங்கரமாகிவிட்டது

முன்பு பணத்துக்கு உத்தரவாதம் இல்லை; இன்றோ உயிருக்கு உத்தரவாதமில்லை. ஓய்வூதியம்பெறக் கோட்டைக்குச் சென்றோர் உயிரையே இழந்துள்ளனர்.

ஆகவே குறிப்பிட்ட நாட்களில் பருத்தித்துறை அஞ்சலகத்திலும் வங்கிக் கிளைகளிலும் ஓய்வூதியம் வழங்க உடனடி நடவடிக்கை எடுங்கள்.

இப்படி பிரசைகள் குழு அதிபரைக் கேட்டுள்ளது. (இ-எ)

**விற்பனைக்கு**

தேக்கு அலுமாரி, ஐஸ் கிறீம் செற், Electric அடுப்பு, ஸ்திரிக்கைப் பெட்டி, Grease பம், அலடின் விளக்கு Camera, Mechanical and Electrical Engineering புத்தகம் மற்றும் உபகரணங்கள். பழைய மண்ணெண்ணெய்க்குத ஒழுங்கை, உரும்பராய் தெற்கு, உரும்பராய்.

## மானியத்தைப் பெற்று தெங்கு உற்பத்தியை அதிகரிக்கக் கோரிக்கை

பண்டத்தரிப்பு ஜூன் 8
தென்னங்கன்று நட்டால் ரூபா 50 மானியமாகக் கிடைக்கும். அரசாங்கத்தின் இந்த மானிய உதவியைப் பெற்று யாழ்ப்பாண மக்கள் தமது தெங்குப் பொருட் தேவைகளைத் தாமே பூர்த்தி செய்ய வேண்டும்.

பண்டத்தரிப்பு கிராம முன்னேற்றச்சங்க செயலாளரும் சமூகசேவையாளருமான திரு. ச செல்வரத்தினம் இப்படித் தெரிவித்தார்.

அரசாங்க உதவியுடன் பிரதேச பொருளாதார வளத்தைப் பெருக்குவது தொடர்பான கலந்துரையாடலில் அவர் உரையாற்றினார்.

அவர் மேலும் பேசியதாவது:-

இரண்டு கன்றுகளுக்கு இடையில் 24 அடி இடைவெளி விட்டு குறைந்தது பத்துக்கன்றுகளை நாட்டினால் மானியம் கிடைக்கும்.

தென்னை அபிவிருத்தி யாழ் பிராந்திய அபிவிருத்தி அலுவலர் எமது பிரதேசத்தில் நல்ல விளைவு தரும் உயர்ரகக் கன்றுகள் வேண்டும் என்ற பேரவாவுடன் இருக்கின்றார்.

அவர் இந்த விடயத்தில் நல்ல ஒத்தாசை புரிகிறார்.
இப்படி அவர் கூறினார் (இ.- 120)

### கவிஞர் வைரமுத்துவின் பாடலில்

## தெரிவுக்குழு உறுப்பினர் மனதைப் பறிகொடுத்தனர்

இந்தியாவின் சிறந்த பாடலாசிரியர் விருதும் தமிழரான கவிஞர் வைரமுத்துவுக்கு கிடைத்தது

'முதல் மரியாதை' படத்துக்கான பாடல்களுக்காகவே வைரமுத்து சிறந்த பாடலாசிரியர் விருதைப் பெற்றார்.

இறுதித் தெரிவில் வைரமுத்துவுக்கும் பிரபல இந்திப் பாடலாசிரியர் ஒருவருக்கும் தான் போட்டி ஏற்பட்டது.

உருதுப்பாடல் ஒன்றைக் காப்பி அடித்துத்தான் அந்த ஹிந்திப் பாடலாசிரியர் பாடலை இயற்றியிருந்தார் என்பதை தெரிவுக் குழு உறுப்பினர் ஒருவர் கண்டுபிடித்தார்.

வைரமுத்துவின் 'முதல் மரியாதை'ப் பாடல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு தமிழ் தெரியாத தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டன.

தமிழ்ப்பாடல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பிலேயே தெரிவுக் குழு உறுப்பினர்கள் மனதைப் பறிகொடுத்ததினால், சிறந்த பாடலாசிரியர் விருதும் வைரமுத்துவுக்குக் கிடைத்தது.

தினசரி சினிமா

தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் திரைப் படத்துக்கான விருது 'ஸ்ரீ நாராயண குரு' மலையாளப்படத்துக்குக் கிடைத்தது.

## இலங்கைக்கான அமெரிக்க உதவி 22 சதவீதம் வெட்டு!

கொழும்பு, ஜூன் 8
இலங்கைக்கான அமெரிக்காவின் உதவி 1987 இல் 22 சதவீதம் குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் இதனை அறிவித்தது.

உணவு, மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்கு அமெரிக்கா 1987 ஆம் ஆண்டில் 3 கோடி 90 லட்சம் டாலரையே வழங்கும்.

இத்தொகை இந்த ஆண்டில் வழங்கப்பட்டுள்ள உதவியிலும் பார்க்க 1 கோடி 10 லட்சம் டாலர் குறைவாகும். இலங்கை 1986 இல் 5 கோடி டாலரை அமெரிக்காவிடமிருந்து பெற்றிருந்தது. (உ-எ)

### வயாவிளானில்

## வீடு பார்க்க சென்றவருக்கு ஏற்பட்ட அனுபவம்

பலாலி ஜூன் 8
வயாவிளான் மகாவித்தியாலய இராணுவ முகாமுக்கு அண்மையில் உள்ள தனது வீட்டை உத்தரவு பெற்று பார்க்கச் சென்ற வீட்டு உரிமையாளர் ஒருவர் சிப்பாய்களால் நன்றாக வேலை வாங்கப்பட்ட பின் திருப்பி அனுப்பப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த வாரம் நடந்தது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

கடந்தவாரம் அரசாங்க அதிபர் ஊடாக இராணுவ முகாம் பொறுப்பதிகாரியின் அனுமதியுடன் வயாவிளான், குரும்பசிட்டி மக்கள் தமது வீடுகளைப் பார்க்கச் சென்றனர்.

சம்பந்தப்பட்ட நபரும் தமது வீட்டைப் பார்க்க விசேஷ அனுமதி பெற்றுச் சென்றார்,

அவருடன் இரண்டு சிப்பாய்களும் அவரது வீட்டுக்குக் கூடவே சென்றனர்.

அவரது வீட்டு விறுந்தைப் பகுதியில் மண் மூடைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததை கூடச் சென்ற சிப்பாய்கள் கண்டனர்.

உடன் அப்பகுதியை நோக்கி சிப்பாய்களால் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

கீழே படுத்தபடியே அவ்விடம் சென்று யார் நிற்கின்றார்களென பார்க்கும்படி வீட்டுரிமையாளரை சிப்பாய்கள் ஏவினர்.

வீட்டுரிமையாளர் சென்று பார்த்து எவரும் இல்லாததை உறுதிப்படுத்தினார்.

திரும்பி வரும்படி அவரை சிப்பாய்கள் அழைத்தனர்.

ஒவ்வொரு மணல் மூடையையும் அவிழ்த்து கொட்டும்படி ஏவினர்.

இறுதியாகவிருந்த மூடையைத் தூக்கிச் சுமப்பித்தபடி தமது முகாமுக்கு செல்லுமாறு அவரைப் பணித்தனர்.

பாடசாலை முகாமுக்குள் இராணுவத்தால் அதிக அளவில் தோண்டி வைக்கப்பட்ட 'பதுங்கு குழி'களுக்குள் இராணுவத்தினர் இறங்கியவுடன் வீட்டுரிமையாளர் கலைத்துவிடப்பட்டார்.

வீடுபார்க்கச் சென்றவர் 'தலைதப்பியது போதும்' என்றபடி வந்து சேர்ந்தார். (இ-119)

### மக்கள் முகம்

## வட்டக்கச்சி நிர்வாகிகள்

கிளிநொச்சி, ஜூன் 8
கிளிநொச்சி வட்டக்கச்சி மேற்குகிராம அபிவிருத்திச் சங்கத்தின் நடப்புவருட நிர்வாகிகள் தெரிவுநடைபெற்றது.

வட்டக்கச்சி கிராம சேவகர் திரு அ சு.பேரம்பலம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்

நிர்வாகிகள் தெரிவின் போது சி. தங்கராசா தலைவராகவும், திரு. ச. நடேசபிள்ளை திரு த. குணரத்தினம் ஆகியோர் உபதலைவர்களாகவும் திரு. க. சதானந்தராஜன் செயலாளராகவும், திரு பே திருக்கேதீஸ்வரன் உபசெயலாளராகவும் திரு. க. பற்குணசிங்கம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஏழுபேர் கொண்ட நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர். (இ - 76)

## நீதி மன்றங்கள் புதிய இடங்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 8
யாழ். மேல் நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம் ஆகியவை பாதுகாப்பான வேறு இடங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன,

குருநகரிலுள்ள மேல் நீதிமன்ற நீதிபதி விடுதியில் மேல் நீதிமன்றம் இயங்கும்.

நல்லூர் முத்திரைச் சந்திக்கும் பருத்தித்துறை வீதியில் சங்கிலியன் சிலைக்கும் எதிரிலுள்ள 225 ஆம் கட்டிட மேல்மாடியில் நீதிவான் நீதிமன்றம் செயல்படும்.

யாழ் மாவட்ட நீதிமன்றத்தையும் பாதுகாப்பான இடத்துக்கு மாற்ற முயற்சிகள் நடைபெறுகின்றன.

யாழ். காணிப் பதிவகம் கச்சேரி பழைய பூங்காவில் உள்ள கட்டிடத்திற்கு இடம் மாறியது. (ஓ-5)

உள்நாட்டு வெளிநாட்டு
**ரெலிபோன் பேச**
எல்லோரும்
**ரெலிகுளோப்பிற்கு**
விரும்பிச் செல்கிறீர்களே—
ஏன்? எதற்காக?

* யாழ்நகரில் தன்னியக்க மின்பொறிக் கருவிகள் பொருத்தப் பெற்ற
  ஆறு ரெலிபோன் லைன்கள்
  உள்ள ஒரே ஒரு நிறுவனம்
* வேறு எந்தச் 'சோலி'யும் இல்லாது முற்று முழுமையாக ரெலிபோன் சேவையிலேயே கண்ணும் கருத்தும் கொண்டது.
* வந்ததும் வராததுமே உடனடிக் கவனிப்பும் உங்கள் 'அலுவலில்' அக்கறையும்.
* பஸ், மினிபஸ் பிரயாண வசதிகொண்ட பெருந்தெருவில் அமைந்த பாதுகாப்பான, நிம்மதி நிறைந்த இடம். வெகு விசாலமான சௌகரியமான கட்டிடம்.
* அசதிதீர ஆறிஅமர சொகுசான இருக்கை வசதிகள்.
* உங்கள் அபிலாஷைகளைப் பரிவுடன் புரிந்து பணிவன்புடன் சேவை ஆற்றும் அனுபவமும் ஆற்றலும் மிக்க கண்ணியமான அலுவலர்கள்.
* இரவு பகல் 24 மணி நேரமும் —சனி - ஞாயிறு விடுமுறை உட்பட்ட முழு வருட 365 நாட்களிலும் இடைவிடா, கதவடையா தொடர்ச்சியான சேவை.
* அரசினர் அங்கீகாரம் பெற்ற நயமான கட்டணம்.
* பல்வகையிலும் பக்குவம் மிக்க சேவை. நேர கால நியமத்திற்கு சேதி சொல்ல நம்பி வரலாம்.

**ரெலிகுளோப்**
ஆர். ஜி. கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்.
ரெலிபோன்: 25088
ஆறு சமாந்தர லைன்கள்.

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## அகதிகளை அரவணைப்பது தமிழ் மக்கள் கடமை

### கலை விழாவில் அதிபர் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 8
இடம் பெயர்ந்துவந்த அகதிகளை ஆதரித்து அரவணைக்க வேண்டியது தமிழ் மக்களாகிய எங்களின் கடமை

இவ்வாறு வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் எஸ். சரவணபவான் குறிப்பிட்டார்.

அகதிகள் புனர்வாழ்வு நிதிக்காக யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கலைவிழாவிற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

அவர் மேலும் பேசுகையில்; அகதிகளின் பரிதாப நிலையை மக்களுக்கு எடுத்துக் காட்டவே, அவர்கள் சம்பந்தமான கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

மரம் செடி மட்டுமின்றி மக்கள் வாழவும் மண் அவசியம். அந்த மண்ணை மீட்கவே எம் இளைஞர்கள் போராடுகிறார்கள்.

தாம் பிறந்த மண்ணை விட்டு அகதிகளாக எம்மிடம் வந்தவர்களை நாம் அரவணைத்து ஆதரவளிக்கவேண்டியவர்களாக உள்ளோம் என்று கூறினார்.

கலைவிழாவில் கலைநிகழ்ச்சிகளாக; வில்லிசைக் கலாநிதி கணபதிப்பிள்ளை (சின்னமணி)யின் வில்லிசை நிகழ்ச்சியும்; செல்விமஞ்சுளா குருசாமியின் நடன நிகழ்ச்சியும்; பளை மகாவித்தியாலய மாணவிகளின் 'மடமையைக் கொழுத்துவோம்'' எனும் நாடகமும் இடம் பெற்றன.

இக் கலைவிழாவை யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்கு வீதியிலுள்ள அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் ஒழுங்குபடுத்தியிருந்தது (இ5)

## தீச்சுடர் ஏந்திவர 'ரெஸோ' ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜூன் 8
மறைந்த போராளிகளுக்கு அஞ்சலிசெலுத்து முகமாக வெள்ளியன்று உரும்பராயில் இருந்து யாழ்ப்பாணம் வரை தமிழ் ஈழ மாணவர் பேரவையினால் (ரெஸோவினால்) சைக்கிள் ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது

வெள்ளி காலை உரும்பராயில் உள்ள சிவகுமாரனின் சிலைக்கருகே நூற்றுக்கணக்கான பொது மக்கள் கூடினர்.

சிவகுமாரனுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக ரெஸோஉறுப்பினர்களின் அணிவகுப்பு மரியாதை நடைபெற்றது. மரியாதை வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

பின்னர் சிவகுமாரனின் தந்தையார் சிலைக்கு முன்னால் மெழுகுவர்த்தி ஒன்றை எரியவிட்டார்.

உரும்பராயிலிருந்து தீச்சுடரை ஏந்தி இளைஞர் ஒருவர் ஓடிவர ஏனையோர் சைக்கிளில் ஊர்வலமாக வந்தனர்.

யாழ் சுபாஸ் கபேக்கு முன்னால் பெரிய தீச்சுட்டி ஒன்றை அவர்கள் [illegible] வைத்தனர்.

பின்னர் ஆஸ்பத்திரி வீதிவழியாகச் சென்று யாழ்சென்பற்றிக்ஸ் கல்லூரியில் ஊர்வலம் முடிவுற்றது. (உ-10)

## இடம் பெயர்ந்தோர் தம்வீட்டுப் பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதி

பலாலி, ஜூன். 8
வயாவிளான் இராணுவ முகாம் அமைக்கப்பட்டதனால் இடம் பெயர்ந்தோர் தமது வீடுகளில் இருந்து பொருள்களை எடுத்துச் செல்ல இராணுவப் பொறுப்பதிகாரியால் அனுமதி வழங்கப்பட்டது.

அப்பகுதியில் உள்ள பிரசைகள் குழுவும், பொது மக்களும் யாழ். அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசாங்க அதிபர் இராணுவ அதிகாரியுடன் தொடர்பு கொண்டு இதற்கான அனுமதியைப் பெற்றுக் கொடுத்தார்.

29 ஆம் திகதியும், 30 ஆம் திகதியும் தத்தமது பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டதனால், குறிப்பிட்ட பகுதி வீடுகளில் இருந்து மக்கள் அவசரம் அவசரமாக 'லான்ட் மாஸ்டர்' களிலும் மாட்டு வண்டிகளிலும் பெறுமதி வாய்ந்ததும் அவசியமானதுமான வீட்டுப் பாவனைப் பொருள்களை எடுத்துச் சென்றனர்.

மக்கள் தத்தமது பொருள்களை எடுத்துக் [illegible] ஹெலிகொப்டர் ஒன்றும்தாழப் பறந்து ரோந்து சுற்றியது. (இ- 119)

## கொக்குவிலில் கோழி திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 8
கொக்குவில் பழைய தபால் நிலைய ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றில் இரண்டாவது தடவையாக கோழிகள் திருடப்பட்டுள்ளன.

இத் திருட்டுச் சம்பவத்தை அடுத்து தீவிரவாத இயக்க இளைஞர்கள் திருடரைக் கண்டு பிடிப்பதில் ஈடுபட்டுள்ளார்கள். (இ-6)

## ஹோட்டல் தகர்ப்பு

மயிலிட்டி, ஜூன்- 8
மயிலிட்டியில் ஹோட்டல் ஒன்று வியாழன் இரவு குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

இது தொடர்பாக தமிழ் ஈழ இராணுவம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது புலனாய்வுத் துறையினருக்கு கிடைத்திருந்த தகவலின்படி மயிலிட்டிக் கடற்கரையில் அமைந்திருந்த ரூறிஸ்ட் ஹோட்டல் ஒன்றினை கடற்படைத் தளமாக்க ஸ்ரீலங்கா ராணுவம் திட்டமிட்டிருந்தது.

இதற்கென தன்னியக்க துப்பாக்கி பொருத்தப்பட்ட விசைப்படகு ஒன்றின் மூலம் இரண்டு மூன்று நாட்களாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டதை அவதானித்த எமது இராணுவப் பிரிவு வியாழன்இரவு9.15 மணியளவில் மேற்படி ஹோட்டலை பி.ஈ.கே. குண்டு மூலம் தரைமட்டமாக்கியது.

சம்பவம் நடந்த இடத்திற்கு உடனடியாக பலாலியிலிருந்து விரைந்து வந்த ஹெலிக்கொப்டரினால் துப்பாக்கிப் பிரயோகம்செய்யஎடுத்த முயற்சியும் எம்மால் முறியடிக்கப்பட்டது.

—இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

**வேல் ஆனந்தன்**
நாட்டிய அமையம்
அளிக்கும்
**'என்னதான் முடிவு'**
(நாட்டியம்)


இடம் ; சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபம்
காலம் ; 10, 11, 12 யூன் '86. பி.ப. 2.30 மணி
பிரவேசம்; ரூபா 15/-, ரூபா 10/-

குறிப்பு; நாட்டிய அமையத்தின் அங்கத்தவர்களுக்கும் அழைப்பாளர்களுக்குமான நிகழ்ச்சி 10-6-86ம், 24-5-86, 26-5-86ம் திகதிகளுக்கான ரிக்கற் பெற்றவர்கள் முறையே 11ஆம், 12ஆம் திகதியும் அனுமதிக்கப்படுவர். தபால் தாமதத்தால் அழைப்புகள் கிடைக்காத அங்கத்தவர்கள் மண்டபவாயிலில் உள்ள பெயர்ப்பட்டியல் சான்றுடன் அனுமதிக்கப்படுவர்

பிரசுர உபயம்; ரெலிகுளோப்

## நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்
சின்னத்தம்பி
வேலுப்பிள்ளை
அருளானந்தம்
(இளைப்பாறிய ஆசிரியர்— சின்னையா)



மண்ணில்: 17-03-1909
விண்ணில்: 10-05-1986

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்த அன்புத் தந்தையே! எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்று 31 நாட்கள் சென்று விட்டனவே!

ஐயா! எம் ஆருயிரே, இறைவன் அருகிருந்து, எம் இல்லங்களின் காவற் தெய்வமாயிருந்து, நலமுடன் நாம் வாழ என்றும் இறைவனை வேண்டுவீர் தந்தையே!

எமது ஐயாவின் இறுதிக் கிரியைகளில் கலந்து சிறப்பித்தவருக்கும், எமது ஆறாத் துயருக்கு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது இதயங் கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவரின் ஆத்மசாந்திக்காக 9-6-86 ல் ஏழாலை அர்ச் இசுரோர் கோவிலில் காலை 7 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

பாதை நெடுந்தூரம் உள்ளது. எழுந்திரு, விழித்தெழுந்து இலட்சியத்தை அடையும் வரை நிற்காதே.

— சுவாமி சிவானந்தர்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல. 15 ஜேசு ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் — 08 06-86 — தொலைபேசி 24805, 22078 — உ. பெ. 22

# அடைக்கலத்துக்கு அழைத்துச் சாகடிப்பதா?

யாழ்ப்பாணம் இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள வங்கிக்கு ஒய்வூதியம் பெறச் சென்ற இருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளாகிக் காயமுற்றனர்!

பலாலி இராணுவ முகாமில் வைத்து அடகு நகைகளை மீட்டு வந்த இருவர் ஹெலிக்கொப்டர் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்கள்!!

மக்களுக்குச் சேரவேண்டிய பணம், நகை ஆகியவற்றை வழங்குவதற்கு இராணுவ முகாம்கள் தான் பாதுகாப்பானவை. இவ்வாறு கருதி அங்கேயே அவற்றை வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்தது.

ஆனால் உடைமைகளைப் பாதுகாப்பாகப் பெற்று வரலாம் என்ற நம்பிக்கையுடன் செல்வோர், அநியாயமாகச் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள், உடைமைக்குப் பாதுகாப்புத் தருவதாகக் கூறி மக்களை அழைத்து அவர்களின் உயிர்களைப் பறிக்கிறார்கள் அரசாங்கத்தின் ஏவலாளிகள்.

இது, அடைக்கலம் தருவதாகக் கூறி அடித்துக் கொல்வதற்குச் சமனானதாகும். போராளிகளைத் தாக்குவதாகச் சொல்லி, நிராயுதபாணிகளான தமிழ்ப் பொதுமக்களைச் சுட்டுக் கொல்லும் ஆயுதப்படையினர், இப்போது தமது இருப்பிடத்துக்கே அவர்களை அழைத்துச் சாகடிக்கும் நிலை உருவாகி வருகிறது. இதுவும் தமிழினை நாளாந்தம் சிறுகச் சிறுக அழித்து விடும் ஒரு சூழ்ச்சியோ?

ஒய்வூதியம் பெறும் முன்னாள் அரச ஊழியர்களில் தொண்ணூறு சத விதமானோர் வயோதிபர்கள். நோய்வாய்ப்பட்டவர்கள். அதிக தூரம் நடக்க முடியாதவர்கள் அதிக தூரம் பிரயாணம்செய்ய முடியாதவர்கள். அவர்கள் எல்லோரும் தமது கடைசிக் காலத்தில் தமது வயிற்றுப் பசியைத் தீர்ப்பதற்கு இந்த ஒய்வூதியத்தைத்தான் நம்பி இருக்கிறார்கள்.

அதனால் முன் சொன்ன பல கஷ்டங்கள், சிரமங்கள் மத்தியிலும் ஒய்வூதியத்தை எடுத்தாக வேண்டுமே என்பதால் கோட்டைமுகாம் வங்கிக்கு வருகிறார்கள்.

ஆனால் ஒய்வூதியப் பணத்தைப் பெற்றுக் கொண்டு வீடு போய்ச் சேரும் வரை அவர்களது உயிருக்கு உத்தரவாதம் இல்லை. ஒவ்வொரு மாதமும் மரணப் பொறியில் இருந்து தப்ப வேண்டிய நிர்ப்பந்தம்.

இதிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும். முன்னரைப் போல அவரவர் ஊரில் உள்ள தபாலகத்தில், கிராம வங்கியில் ஒய்வூதியம் வழங்கப்படவேண்டும்.

அவ்வாறு வழங்கத் தொடங்கினால் கொள்ளைகள் நடக்கும். ஆகையால் அப்படிச் செய்ய முடியாது என்று அரசு சொல்லலாம். அது நியாயமல்ல; ஏற்கக் கூடியதும் அல்ல.

அரசாங்கத்தில் கடமை புரிந்து மக்கள் சேவையில் தம்மை ஈடுபடுத்திய ஒய்வூதியக்காரருக்கு அவர்களுக்கு வசதியான இடத்தில் ஒய்வூதியத்தை வழங்குவதே நியாயம்.

மக்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பு அளிப்பதா? அல்லது அரசாங்கத்துக்கு மக்கள் பாதுகாப்பு அளிப்பதா? எது சரி? மக்களுக்காக அரசாங்கமா? அல்லது அரசாங்கத்துக்காக மக்களா? அரசாங்கம் மக்களுக்காக இல்லை என்றால் அது இராணுவத்தையும் தமிழ்ப் பகுதிகளிலிருந்து விலக்கிக் கொண்டு, தானும் பதவியை விட்டு விலகிப் போய்விட வேண்டும்.

அடுத்தது அடகு நகை எடுத்துச் சென்றவர்கள் விவகாரம்.

மக்கள் தமது பகுதிகளில் உள்ள மக்கள் வங்கிகளில்தான் நகைகளை அடகு வைத்தார்கள். வங்கி நிர்வாகம் மக்களின் நகைகளை அடகு வைத்த அதே இடத்திலேயே திரும்ப ஒப்படைக்க வேண்டும். அதுவே நீதி. அதுவே கடமையும் பொறுப்பும்கூட. இத்தனை வருடமாக இழுத்தடித்து விட்டு இப்போது பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி இராணுவ முகாமில் வைத்து நகைகளைத் திரும்ப ஒப்படைக்கிறது. தமக்கு உள்ள பொறுப்பை — அதாவது நகைகளை திரும்பக் கொடுக்கும் பொறுப்பை தீர்த்து விடுவதற்காக இராணுவ முகாமில் வைத்து வங்கி நிர்வாகம் அடகு நகைகளை ஒப்படைக்கிறது. ஆனால் அடகுநகை எடுக்க வரும் மக்களுக்குப் பாதுகாப்பில்லை என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

ஆகையால் மக்கள் வங்கியும் அடகு நகைகளை அந்தந்தக் கிளைகளில் வைத்துத் திரும்ப ஒப்படைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கான பாதுகாப்பைச் செய்வது அதன் பொறுப்பு.

உயிரைப் பணயம் வைத்து இராணுவ முகாமுக்கு வந்து அடகு நகைகளை எடுக்குமாறு மக்களை நிர்ப்பந்திப்பதை வங்கி நிறுத்த வேண்டும். அடகு வைத்தோருக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யக் கூடாது. அவர்கள் உயிர்களைப் பறிக்க உடந்தையாகவும் இருக்க வேண்டாம். செய்வார்களா?

## 200 பேருக்கு கண் சிகிச்சை

இணுவிலில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் இப் பகுதியில் கண்நோயால் பாதிக்கப்பட்ட சுமார் 200க்கு அதிகமான மக்களுக்கு இலவச கண் சிகிச்சை செய்யப்பட்டது.

டாக்டர் தெய்வேந்திரம் நோயாளர்களை பரிசோதித்து சிகிச்சையளித்தார்.

சுகாதார பரிசோதகர் திரு. தங்கவேலாயுதம் இவ்விலவச சிகிச்சைக்கான ஏற்பாடுகள் செய்திருந்தார்.

இணுவில் சமாதான சபைத தலைவர் திரு. எஸ். சண்முகலிங்கம் தேவையான உதவிகளை வழங்கினார்.

சின்னத்துரை அன்சன்ஸ் ஸ்தாபனத்தார் சிகிச்சைக்குத் தேவையான மருந்து வகைகளை இலவசமாக வழங்கியிருந்தனர். (உ - 90)

# ராஜீவையும் மற்றும் அமைச்சர்களையும் கொல்லத் தீர்மானம்

## சீக்கிய தீவிரவாதிகள் நிறைவேற்றினர்

புதுடில்லி, ஜூன் 7

பிரதமர் ராஜீவ் காந்தியையும், மத்திய அமைச்சர்களையும் பஞ்சாப் முதலமைச்சர் சுர்ஜித்சிங் பர்னாலாவையும் கொலைசெய்வது என்று பொற்கோயிலில் கூடிய சீக்கிய தீவிரவாதிகள் தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர்.

சீக்கியர்களின் புனித ஸ்தலமான பொற்கோயிலுக்குள் இந்திய இராணுவம் பிரவேசித்த இரண்டாவதுவருட நிறைவையொட்டி அமிர்தசரஸில் சீக்கிய தீவிரவாதிகள் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தினர்.

நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்களில் வந்த சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட சீக்கியர்கள் வாள்களைச் சுழற்றியபாறு பொற்கோயிலுக்குள் சென்றனர்.

அங்கு நடைபெற்ற கூட்டத்திலேயே பிரதமர் ராஜீவ் காந்தியையும் மற்றும் அமைச்சர்களையும் கொலை செய்யும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த ஊர்வலத்துக்கு பிந்தரன் வாலேயின் தகப்பனார் தலைமை வகித்தார்.

பொற்கோயிலுக்குள் இந்திய இராணுவத்துடன் நடந்த சண்டையில் பிந்தரன்வாலே கொலை செய்யப்பட்டது தெரிந்ததே

இதற்கிடையில் அமிர்தசரஸில் கூடிய சுமார் 2500 சீக்கிய தீவிரவாதிகள் அரசின் ஆதரவுடன் கூடிய படையை எதிர்த்துப் போராடுவதற்காக பொற்கோவிலில் இராணுவம் ஒன்றைத் திரட்ட முடிவு செய்துள்ளனர்.

பஞ்சாப் முதல்வர் பர்னாலாவை கண்டனம்செய்வதும், கடந்த ஏப்ரல் மாதம் ராஜினாமாச் செய்த நான்கு அமைச்சர்களைப் பாராட்டுவதும் என அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது

பொற்கோயில் பிரதேசத்துக்குள் இராணுவத்தை அனுப்பும் அரச முடிவை எதிர்த்துஅமைச்சர்கள் நால்வரும் பதவி துறந்தது தெரிந்ததே.

கைதுசெய்யப்பட்டுள்ள சீக்கிய தலைவர்களை விடுவிக்க தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனில் 17ஆம் நூற்றுண்டில் பஞ்சாப் பிரதேசத்தில் மொகலாய கவனர்கள் கொலை செய்யப்பட்டது போலவே பஞ்சாப் மாநிலஅரசும், மத்திய அரசும் பிரச்சினைகளை எதிர்நோக்கும் எனவும் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## ரத்து

சென்னை, ஜூன் 7

இந்தியாவிற்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளுக்கு இது வரை காலமும் வழங்கப்பட்டு வந்த 'தரையிறங்கும் அனுமதி' முறை ரத்துச் செய்யப்பட்டுள்ளது

ஆகாய மார்க்கமாகவோ அல்லது கடல் மார்க்கமாகவோ இந்தியாவிற்கு வருபவர்களிடம் சில படிவங்களைக் கொடுத்து விவரங்களைச் சேகரிக்கும் இந்த முறையால் எவ்வித பிரயோசனமுமில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## திருச்சியில் புராதன கல சிலை கண்டுபிடிப்பு

சென்னை, ஜூன் 7

திருச்சியிலுள்ள ஒரு கோவில் குளத்தினருகே உள்ள புதரினடியில் 15 ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

இச்சிலை 2 தொன் எடை உடையது.

3 அடி உயரமுடையதும் ஒன்பதரை அடி அகலமுள்ளதுமான இச்சிலை ஐயனார்சிலையாக இருக்கலாம் என இதை கண்டெடுத்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

(இ-5)

## மனிதரை விலைக்கு வாங்கி ஆராய்ச்சி

### வைத்தியர் கழகம் கண்டனம்

டாக்கா, ஜூன் 7

வைத்திய பரிசோதனைக்கு மனிதர்களைப் பயன்படுத்துவது கண்டிக்கப்பட வேண்டும் இவ்வாறு சர்வதேச வைத்திய ஆராய்ச்சிக்கழகம் தெரிவித்துள்ளது.

பங்களாதேஷின் பின்தங்கிய கிராமப் பகுதிகளில் மனிதர்களை விலைக்கு வாங்கி வைத்திய பரிசோதனைகளும் ஆராய்ச்சிகளும் நடத்தப்படுகின்றன.

இந்த நிலை மிகவும் அநாகரிகமானதொன்றாகும். மிருகங்களைப்போல மனிதர்களையும் நடத்தும் விதம் கண்டிக்கப்பட வேண்டியது. 'ஹெல்சிங்கி' ஒப்பந்தத்திற்கு இது முரண்பட்டது

இப்படி சர்வதேச வைத்திய ஆராய்ச்சிக் கழகம் தெரிவிக்கிறது.

வாந்திபேதி கிருமிகளுக்கான ஆராய்ச்சிகளுக்கே கூடுதலாக இவ்விதம் மனிதர்கள் பயன்படுத்தப்படுகின்றனராம்.

(இ-ஒ)

## வெளி உலகில்

### இந்தியாவில் எயர் டாக்ஸி சேவைக்கு அனுமதி

புதுடில்லி, ஜூன் 7

இந்தியாவில் 'எயர் டாக்ஸி' சேவையை நடத்த மத்திய அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள பத்து ஆசனங்கள் கொண்ட விமானங்களும், புதிதாக இந்தியாவில் உருவாக்கப்படவிருக்கும் பத்தொன்பது ஆசனங்களைக் கொண்ட சிறிய விமானங்களும் இச்சேவைக்கு உகந்ததாகக் கருதப்படுகின்றன

சுமார் 200 விமானங்கள் உடனடியாக இச்சேவைக்குத் தேவைப்படினும் கைவசம் அத்தொகை கிடையாதென விமானசேவை அதிகாரி தெரிவித்தார்

'எயர் டாக்ஸி' சேவை தனியார்துறையிடம் ஒப்படைக்கப்படும்

(இ-ஒ)

## பொய்யாமொழி



குறள்:

படுபயன் வெஃகிப் பழிபடுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

பொருள்:

நடுவுநிலைமை அல்லாதவற்றைக் கண்டு நாணி ஒதுங்குகின்றவர், பிறர் பொருளைக் கவர்வதால் வரும் பயனை விரும்பிய பழியான செயல்களைச் செய்யார்.

# யாழ்ப்பாணத்தில் வேறு எவரும் காணி வாங்க முடியாது என்பது தவறு

## சபையில் ஷெல்டன்

கொழும்பு, ஜூன் 8

யாழ்ப்பாணத்தில் தமிழர் தவிர வேறு எவரும் காணி வாங்க முடியாது என்று கூறுவது தவறானது.

இப்படி பிரதிநிதி அமைச்சர் ஷெல்டன் ரணராஜா வெள்ளியன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தேசவழமைச் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்று கூறும் தனியார் பிரேரணை ஒன்றை பொல்காவலை எம். பி சுனில் ரஞ்சன் ஜெயக்கொடி சமர்ப்பித்து இருந்தார்.

அந்தப் பிரேரணை மீதான விவாதம்வெள்ளியன்று தொடர்ந்தும் நடத்தப்பட்டது.

அச்சமயம் உள்நாட்டு அமைச்சர் தேவநாயகம் பேசுகையில் சொன்னதாவது;—

தேசவழமைச் சட்டம் யாழ் தமிழர்களுடன் சம்பந்தப்பட்டது. சொத்துக்கள் பிரிவினையைத் தடுப்பதே இச்சட்டத்தின் நோக்கம்

சில மாற்றங்களுடன் சட்ட ஆணைக் குழுவின் அனுமதியுடன் தேசவழமைச்சட்டத்தைத் தொடர்ந்து இயங்கச் செய்யலாம்.

நீதி அமைச்சர் நிஸங்கா விஜயரத்ன சொன்னதாவது;-

தேசவழமைச் சட்டம் யாழ் தமிழரின் பாரம்பரியத்துடன் இணைந்துள்ளது.

சட்ட ஆணைக்குழுவின் அனுமதியுடன் தான் எந்த மாற்றத்தையும் செய்யவேண்டும்.

வெளிவிவகார அமைச்சர் சாஹூல் ஹமீது சொன்னதாவது;-

இலங்கையின் எப்பகுதியிலும் எவரும் காணி வாங்கலாம். தேசவழமைச் சட்டத்தைப்பற்றி ஆராய ஒரு குழு நியமிக்கப்படவேண்டும்

நாடாளுமன்றம் மீண்டும் ஜூன் 19ஆம் திகதி கூடும். (இ-உ-எ)

## சமய சந்நிதிகளில்

### உற்சவ ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன் கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், 21 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூங்காவனமும் நடைபெறும்.

## தியாகி கந்தசாமியின் மரணம் மலைக்குச்சமன்

### அஞ்சலிக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 8

தியாகிகளின் மரணம் மலைக்குச் சமமானது தியாகி கந்தசாமியின் மரணம் அதுபோன்றதே.

இப்படி திரு. க. சின்னத்தம்பி தியாகி கந்தசாமி அஞ்சலிக் கூட்டத்தில் தெரிவித்தார்.

தியாகி கந்தசாமியின் பிறந்த ஊரான வட்டுக்கோட்டையில் கடந்த வியாழக்கிழமை அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது

திரு. சின்னத்தம்பி மேலும் சொன்னதாவது;

சீனர்கள் மரணத்தை இருவகையாகக் கருதுகின்றனர். ஒருவகை [illegible] மற்றது இறகுக்குச் சமமானவை.

இந்த வகையில் தியாகி கந்தசாமியின் மரணம் மலைக்குச் சமமானது.

திரு. கே. வைரமுத்து பேசுகையில் சொன்னதாவது;

தியாகி கந்தசாமியின் கொள்கைகள் அடக்கு முறைகளுக்கு எதிரானவை கந்தசாமி மறைந்தாலும் அவரின் கொள்கைகள் மறையவில்லை

### 5 மூடை மா அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8

கொட்டடிப் பகுதியில் நடந்த ஷெல் தாக்குதல்களினால் வீடுகளை இழந்து அயற்கிராமங்களில் தங்கியுள்ள பொது மக்களுக்கு யாழ் மாநகர [illegible] சங்கத்தினர் ஐந்து மூடை மா வழங்கியுள்ளனர்.

வீடுகளை விட்டு வெளியேறியவர்களுக்கு இது போன்ற பல பொது ஸ்தாபனங்களும் உதவ முன் வரவேண்டும் என மீனாட்சி அம்மன் கிராம அபிவிருத்தி மாதர் சங்கத் தலைவி செல்வி ஜே. செல்வமணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(இ-10)

# இரட்சிப்புக்கு 6 வழிகள்

## ஞானக்கதிர்

1. உண்மையை ஒப்புக்கொள்;- "எல்லோரும் பாவம்செய்து தேவ மகிமையற்றவர்களானோம்." (ரோமர் 3 ; 2) "தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" (லூக். 18 ; 13) வேத வெளிச்சத்தின் அடிப்படையில் நீ ஒரு பாவி என்பதை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2. மனம் திரும்பு;- "நீங்கள் மனந்திரும்பாமல் போனால் எல்லோரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்" (லூக் 13 ; 3) "உங்கள் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனம் திரும்பிக் குணப்படுங்கள்" (அப். 3 ; 20) நீங்கள் பாவத்தின் பயங்கரத்தைப் பார்த்து, அதில் இருந்து மனம் திரும்புதல் வேண்டும்.

3. அறிக்கை செய் - நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கின்றார்." (1 யோ. 1:9) இரட்சிப்பு உண்டாக வாயினாலே அறிக்கை பண்ணுவதைத் தேவன் எதிர்பார்க்கின்றார்.

4. விட்டுவிடு:- துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டுக் கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார் நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயைபெருத்திருக்கிறார் (ஏசா. 55:7) பாவத்தினால் ஏற்பட்ட



துன்பங்கள் போதும்; நாம் அவற்றை அடியோடு விட்டுவிடல் வேண்டும்.

5. விசுவாசி:- தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். (யோ. 3: 16) கல்வாரிச் சிலுவையில் உனக்காக மரித்து உயிர்த்தெழுந்த இயேசுவை விசுவாசி.

6. ஏற்றுக்கொள்;- உன் உள்ளத்திலே விசுவாசத்தின் மூலமாக இயேசுவை உன் இரட்சகராகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் தேவன் தரும் புதிய ஜீவன் உனக்குரியதாகும். இந்த நித்தியமான தீர்மானத்தை எடுத்துக் கொள்வாயா?

(நன்றி கனல்) (இ)

## வாசகர் திருமுகம்

### வரியிறுப்பாளர் கூட்டம் இன்றித் தீர்மானமா?

"கோயிற் காணியில் கட்டடம் வேண்டாம்" என்ற தலைப்புடன் 3-6-1986 ஆம் ஆண்டு திகதி உதயனில் யாழ்ப்பாண வரியிறுப்பாளர் சங்கம் ஒரு கடிதத்தை யாழ் மாநகரசபை ஆணையாளருக்கு அனுப்பியதாகத் தெரிவிக்கும் செய்தி ஒன்று வெளியாகி இருந்தது.

இது சம்பந்தமாக யாழ் வரியிறுப்பாளர் சங்க அங்கத்தவர்களில் பொதுக் கூட்டமோ அல்லது தீர்மானம் எதையும் எடுக்கக் கூடிய செயற்குழுக் கூட்டமோ சில மாத காலமாக நடக்கவில்லை என்பதை அச்சங்கத்தின் உபகாரியதரிசி என்ற முறையில் நான் உத்தியோக பூர்வமாக அறிவிக்கத்தக்க நிலையில் உள்ளேன்.

ஆகவே வரியிறுப்பாளர் சங்கம் சார்பாக எந்த உத்தியோகத்தர் அல்லது வேறு எந்த நபர் இந்த அறிக்கையைப் பத்திரிகைக்கு வெளியிட்டுள்ளார் என்பதை அறிய முடியவில்லை.

இதே நேரத்தில் மாநகரசபை காரியாலயத்தில் யார் கடிதம் எழுதினார் என்று விசாரித்த போது இன்று (5-6-86 வரை) ஒருவித கடிதமும் கிடைக்கவில்லை என்று அறிவித்தார்கள். இன்று வரைமாநகரசபை ஆணையாளருக்கும் கடிதம் கிடைக்கவில்லை என்பதை அறிகிறேன். யாரோ மாநகரசபைக்குச் சேர்க்காமல் பத்திரிகைக்கு மட்டும் அறிக்கை விட்டுள்ளார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

யாழ்ப்பாணத்து வரியிறுப்பாளர்களின்பெரும்பான்மையினர், எமது பழைய இராஜதானியான நல்லூரில் மாநகரசபை அலுவலகக் கட்டடம் அமைப்பதற்கு ஆதரவாயுள்ளார்கள். அதனால் முறையாகக் கூட்டி நடத்தப்பெறும் எந்தக் கூட்டத்திலும் யாழ்ப்பாணத்து வரியிறுப்பாளர் சங்கம் இனி மேலும் இதுபோன்ற கண்டனம் தெரிவிக்க மாட்டாது என்பது என் நம்பிக்கை.

ஆகவே பெரும்பான்மையான வரியிறுப்பாளர் விருப்பப்படி நல்லூரில் மாநகரசபை நிறுவப்பெற்று அவற்றிற்கு உரிய தற்காலிக அல்லது நிரந்தர கட்டிடங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

இராஜராஜேஸ்வரன் தங்கராஜா,
தலைவர்,
இறணுய்வுக்கழகம்.
நல்லூர்- 5- 6- 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A Very Special Offer
Complete ICMA in four years
WITHOUT G C E. O L & A/L
For Consultation and Course Guidance
Cantabia Institute
(Shoot of Oxonia, Colombo)
31, MAIN STREET, JAFFNA.
T'Phone: 24201

# உதயன்

08 06 1986 ஞாயிற்று கிழமை

LONDON EXAMS
I.C.M.A - A — A.A.T. (Inter)
I.C.M.A. - B — I.A.B. (Foundation)
I.D.P.M. - I — I.A.B. (Inter)
A.A.T. (Prelim) — I.A.B- (Final)
Classes by qualified and experianced panel of lecturers commence from 7th June 86
Cantabia Institute
(Shoot of Oxonia, Colombo)
31, MAIN STREET, JAFFNA,
T'Phone: 24201

# அரபுநாடுகளுடனான உறவு பாதிக்கப்படும்

## இலங்கைக்கு ஈரான் தூதுவர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 8

இஸ்ரவேலுடனை தொடர்புகளை இலங்கை தொடர்ந்து பலப்படுத்தினால் ஈரான் மற்றும் அரபு நாடுகளுடன் இலங்கை வைத்திருக்கும் உறவுகள் பாதிக்கப்படும்.

ஈரான் நாட்டின் இலங்கைக்கான புதிய தூதர் எம். காஸேம் பிக்டெலி சோல்தனி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தூதரகத்தில் அண்மையில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் சொன்னதாவது:

இப்பிராந்தியத்தில் இஸ்ரவேல் அனுமதிக்கப்படுவது ஆசிய நாடுகளுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும்

இஸ்ரவேல், ஓர் ஆக்கிரமிப்பு நாடு. இப்பிராந்தியத்தில் புற்றுநோயாக இந்தநாடு வந்து விடும். அந்தப் 'புற்று நோய்' பரவும் முன்னர் அதை வெட்டி எறிந்துவிட வேண்டும்.

முஸ்லிம்களுக்கு மட்டும் இஸ்ரவேல் ஆபத்தைத் தராது; உலகநாடுகளுக்கே இஸ்ரவேலினால் ஆபத்து வந்துவிடும்.

இஸ்ரவேலுடன் ஈரான் ஆயுதத் தொடர்பு வைத்திருப்பதாகக் கூறப்படுவது ஈரானுக்கு அவமரியாதை ஏற்படுத்தச் செய்யப்படும் பொய்ப் பிரசாரம்.

இப்படி புதிய ஈரான் தூதர் சொன்னார். (இ-எ)

## இலங்கைப் பெண்ணை அறையில் பூட்டிவிட்டு

### அமெரிக்கா சென்ற சிங்கைவாசி

சிங்கப்பூர், ஜூன் 7

இலங்கைப் பணிப் பெண்ணை அறை ஒன்றினுள் வைத்துப் பூட்டிவிட்டு அமெரிக்காவில் விடுமுறையைக் கழிக்கச் சென்றாராம், சிங்கப்பூர் எஜமானன் ஒருவர்.

இப்படி மூன்று வாரங்கள் பூட்டப்பட்ட அறைக்குள் சிக்கித் தவித்த இலங்கைப் பணிப்பெண்ணை சிங்கப்பூர் பொலீஸார் காப்பாற்றியதாக 'ஸ்ரெயிட் டைம்ஸ்' நாளிதழ் செய்தி வெளியிட்டது.

விமலா ஜயசிங்க (வயது 27) என்ற இலங்கைப் பெண்ணே இந்த அனுபவத்துக்கு ஆளானவர் எஜமான் இப்பெண்ணை அறைக்குள் வைத்துப் பூட்டிவிட்டு தொலைபேசித் தொடர்பையும் துண்டித்து விட்டார். அப்பெண்ணுக்குத் தேவையான ஒருமாத உணவும் அந்த அறைக்குள் வைத்தே பூட்டப்பட்டதாம்.

அமெரிக்காவில் தற்சமயம் விடுமுறையில் இருக்கும் எஜமானனின் வருகையை எதிர்பார்த்து சிங்கப்பூர் பொலீஸார் காத்து இருக்கின்றார்கள். (இ-எ)

## தேசிய நீரோட்டத்தில் இணைந்து செல்ல தமிழர் மறுக்கிறார்கள்

### சவூதிக்கான தூதுவர் கூறுகிறார்

றியாட், ஜூன் 7

அரச சலுகைகளை ஏற்று தேசிய நீரோட்டத்தில் இணைந்து செயல்பட தமிழர்கள் மறுத்து வருகின்றனர். இதுவே இலங்கையின் இன்றைய பிரச்சினைக்கு மூலகாரணமாக உள்ளது

சவூதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தூதர் ஏ எல். எம் ஹாஷிம் மேற்கண்டவாறு சொன்னார்.

றியாத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் ஜனாப் ஹாஷிம் மேலும் சொன்னதாவது;

இலங்கைத் தமிழருக்குத் தனிநாடு வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி வாதாடி வருகின்றது.

தமிழ் மக்களில் மிகவும் குறைந்த தொகையினரே இப்படிக் கோருகின்றனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு கூடுதல் சுயாட்சியை வழங்க இலங்கை அரசு முன்வந்த போதிலும் அதனை ஏற்க தமிழர் சம்மதிக்கிறார்கள் இல்லை.

தமிழரின் இந்த நிலைக்கு உலக ஆதரவு கிடையாது. இலங்கையில் உள்ள இந்தியத் தமிழர் கூட இலங்கைத் தமிழரை சந்தேகக் கண்ணுடன் தான் பார்க்கின்றனர். இலங்கையின் சனத்தொகையில் 11 சதவீதமே இலங்கைத் தமிழர்.

இப்படி தூதுவர் ஹாஷிம் சொன்னார். (இ-எ)

## மின்சாரம் தடைப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ் மாநகரசபை எல்லைக்குள் உள்ள ஐந்து உபமின் நிலையங்களில் இன்று காலை 8.00 மணி தொடக்கம் மாலை 2.00 மணி வரை மின்சாரம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மனோகரா உபநிலையம், ஐந்துசந்தி உப-நிலையம், கன்னாதிட்டி உபநிலையம், ஆர். ஜி. இன்டஸ்றீஸ் உப நிலையம், தட்டாதெரு உபநிலையம் ஆகியவையே இந்த ஐந்து உப நிலையங்களும் ஆகும்.

இந் நிலையங்களில் முக்கிய திருத்த வேலைகள் இருப்பதன் காரணமாகவே மின் தடைப்படவுள்ளது.

## வித்தாரம்

என்ன முரளி! ஏது சங்கதி? என்ன சிநேகிதர் மாரிட்டை போய்விட்டு வருமாப்போலை. உந்தத் திசையாலை நீ வந்தா அங்கை இருந்து தான் வாறாய் எண்டது எனக்குத் தெரியும்.

சரி ஏதாவது புதினம் அறிஞ்சு வந்தியே. ஒண்டுமில்லையோ. நீ ஒரு நாளும் புதினம் சொல்ல மாட்டாய். நான் தான் உனக்குச் சொல்ல வேணும். அந்த எதிர்பார்ப்போடை தான் வருவாய் சரி எனக்குத்தான் அது தொழில் எண்டு, உனக்கும் அது தொழில் இல்லைத் தான்...

என்ன கொழும்பிலை அடுத்துத் தொடுத்துக் குண்டு வெடிச்ச உடனை பார்லிமேந்திலை அதுக் கெண்டு ஒரு நாள் ஒதுக்கி விவாதம் அது இதுஎண்டு வைக்கினம். போன வியாழக்கிழமையண்டு, அதிஷ்டவசமாக எம். பியா வந்த எல்லாரும் ஏதேதோ எல்லாம் பொரிஞ்சு தள்ளிச்சினம், தெரியுமே.

இஞ்சையும் எங்கடை தமிழ்ப் பிரதேசங்களிலை நாளாந்தம் நம்மடை சனம் சாகுது. ஏன், எப்பிடி நடக்குது எண்டு ஒரு கேள்வி, விளக்கம்... அதுதான் கிடையாது இஞ்சை எந்தச் சனம் செத்தாலும் அவை எல்லாரும் பயங்கரவாதியள். அப்பிடி வெகு சிம்பிளாக முடிச்சுவிடுகினம்.

அடகு நகை எடுக்கப் போய்விட்டு வரயிக்கை செத்தவையும் பயங்கரவாதியள் பட்டியலிலை தான் சேர்க்கப்படுவினம். ஷெல் விழுந்து செத்தவையும் அதே பட்டியலிலை தான். அதாலை தமிழ்ச் சனம் செத்தால் கேட்பார் ஒருவரும் இல்லை.

கொழும்பு சோடாக் கொம்பனியிலை குண்டு வெடிச்ச அண்டு, அதி உத்தமர் ஒரு கூட்டத்திலை பேசினார். அப்ப, சனம் தங்கள் தங்களை, தாங்களே பாதுகாத்துக் கொள்ளவேணும் எண்டு சொல்லிப்போட்டார்.

சிறிலங்காகாரருக்கு நல்ல சந்தர்ப்பம். பார்லிமேந்திலை வெளுத்து வாங்கிச்சினர். உவர் அச்சாணியாரும் கொந்தராத்துக்காரரும் சிறிலங்காக்காரரை கண்டிச்சினம்.

உனக்குத் தெரியுமோ என்னவோ. அதி உத்தமர் ஒருக்கா தன்னாலை இந்த உலகத்திலை முடியாத காரியம் ஒண்டு தான் இருக்கு எண்டு சொன்னவர். ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் தான் தன்னாலை மாத்த முடியாது எண்டும், மற்றது எல்லாத்தையும் செய்யக் கூடிய சர்வ வல்லமையும் இருக்கெண்டு சொன்னவர்.

ஆனா இப்ப குண்டு வெடிப்பிலை இருந்து சிங்கள மக்களைக் காப்பாத்த முடியாது எண்டதை மறைமுகமாகச் சொன்னாரோ சொன்னார்! எதிர்க்கட்சி எம் பிமார் கிழிகிழி எண்டு வைச்சுக் கிழிச்சினம். உது தானப்பா சொல்லுறது ஆனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம் எண்டு.

* * *

சங்கதி தெரியுமே உனக்கு? குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்குப் பிறகு கொழும்புப் பக்கம் லொறியள் போய் வாறது குறைஞ்சு போய் இருந்தது. இப்ப கிளிநொச்சிச் சண்டையோடு அது முற்றாகவே நிண்டுவிட்டுது.

அதாலை இஞ்சை குடாநாட்டிலை கடைக்குக் கடை ஒவ்வொரு சாமான் ஒவ்வொரு விலைக்கு விக்கினம். முட்டை முதற்கொண்டு விறகு வரைக்கும் விலையள் நினைச்ச நினைச்ச மாதிரி ஏத்தி வைச்சிருக்கினம் சின்ன அசுகை எண்டா காணும் எங்கடை வியாபாரிமார் எக்கச்சக்கமா ஏத்திப்போடுவினம்

இப்ப கடை போட்டிருக்கிறவை சில பேர் வன்செயலுகளோடை அங்காலை தெற்காலை இருந்து வந்தவை அவை அங்கை அவையிட்ட அடிச்ச மாதிரி இங்கையும் அடிக்கப் பாக்கினமோ தெரியாது

ஷெல் சூடு எண்டும் ஹெலிச் சூடு எண்டும் இஞ்சை சனம் சாகுது. உவை வியாபாரிமார் கொள்ளை லாபம் அடிச்சு ஆருக்குத் தேடுகினமோ தெரியாது

தொண்டேடி

## இன்று நடப்பவை

### நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 8

கோப்பாய் சிவம் எழுதிய சைவாலய கிரியைகள் நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. வே ந. சிவராஜா தலைமை வகிப்பார் சோமசுந்தரதேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளுரை ஆற்றுவார்கள்.

திரு. க. சி. குலரத்தினம், வித்துவான் வசந்தா வைத்தியநாதன்; சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மாஅப்பாக்குட்டி, கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றுவார்கள். (இ-9)

### சரத் அஞ்சலி கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

கலவான முன்னாள் எம் பி சரத் முத்தெட்டுவேகம அஞ்சலிக் கூட்டம் நீர்வேலி மத்தி வேதவல்லி இல்லத்தில் இன்று (ஞாயிறு) பிற்பகல் 3 30 மணியளவில் நடைபெறும்.

திருமதி வேதவல்லி கந்தையா தலைமை வகிப்பார்.

திரு. பொன். குமாரசாமி, இ. முருகையன், டொமினிக் ஜீவா, எஸ். விஜயானந்தன், எஸ் கே. சந்திரா ஆகியோர் அஞ்சலி உரைகள் நிகழ்த்துவர். (இ-எ)

### அச்சுவேலியில்

பலாலி, ஜூன் 8

சரத்முத்தெட்டுவேகம நினைவு அஞ்சலிக்கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு அச்சுவேலி திரேசா மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

கூட்டத்துக்கு டாக்டர் நந்தி தலைமை வகிப்பார். பேராசிரியர் கா. சிவத்தம்பி, முன்னாள்மாவட்ட சபைத் தலைவர் திரு. ந இராசேந்திரன், திரு பொன். குமாரசாமி திரு. விஜயானந்தன் ஆகியோர் உரையாற்றுவர். (இ-119)

### ஆசிரியருக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 8

இன்று ஞாயிறு காலை ஆசிரியர்களுக்கான "தொழில்நுட்ப கல்வி கற்பித்தலும் முறைசாராக் கல்வியும்" என்ற தலைப்பிலான சேவைக்கால கருத்தரங்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

வட்டாரக் கல்வி அதிகாரி (தொழில் நுட்பம்) திரு. எஸ். சுப்பிரமணியம் சிறப்புரை ஆற்றுவார் (இ-9)

## சிப்பாய்கள் கண்ணி வெடி பரிசோதனை

பலாலி ஜூன். 8

பலாலி இராணுவ முகாமிலுள்ள சிப்பாய்கள் பலாலி விமான நிலையம் வழியாக கட்டுவன் சந்திக்கு அண்மையில் உள்ள விநாயகர் ஆலயத்தடிக்கு வந்து திரும்பினர்.

வியாழக்கிழமை இச்சம்பவம் நடந்தது

சரமாரியான துப்பாக்கிச் சூடு சகிதம் சுமார் 50 க்கு மேற்பட்ட சிப்பாய்கள் வீதியின் இருமருங்கிலுமுள்ள வீடுகள் பற்றைகள் என்பவற்றில் "கண்ணி வெடிப் பரிசோதனை" செய்து கொண்டு வந்தனர்.

வீதிக்கருகாமையில் உள்ள வீடுகளை விட்டு மக்கள் ஏற்கனவே எழுந்து சென்று விட்டதனால் எவ்வித உயிர்ச் சேதமும் ஏற்படுத்தப்படவில்லை

எனினும் வீதியின் இருமருங்கிலுமுள்ள வீடுகளின் வேலிகள் வெட்டியும் பிடுங்கியும் அதனூடாக சிப்பாய்கள் வந்தனர். (இ-119)

### கருவாடு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடபகுதியில் இருந்து கருவாட்டை வாங்குவது பாதுகாப்பானதாக இல்லை என்று திணைக்களம் கருதுகிறது

வடபகுதியில் இருந்து கருவாடு 'சிப்பம்' ஆகத்தான் கொழும்புக்கு அனுப்பப்படுவது வழக்கம். (எ-இ)

### இசை நிகழ்ச்சி

டோக்கியோ, ஜூன் 7

நால்வர் அடங்கியதென் இந்திய இசைக்குழு ஒன்று இந்தியாவில் உள்ள உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கான இசை நிகழ்ச்சி ஒன்றை டோக்கியோவில் நடத்தியது

### ஆஸ்பத்திரியி..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விசாரித்தனர்.

இச்சம்பவத்தில் பதற்றமடைந்த சிலர் உடனடியாக ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறியுள்ளனர்.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் இருந்து நேற்று யாழ் ஆஸ்பத்திரிக்கு வந்தவர்கள் வருமாறு:-

பி. ராஜா —(வயது14) கிளிநொச்சி

மிக்போல்வேதநாயகம் (23 வயது) திருநகர் செல்லையா இராசதுரை (30 வயது) விநாயகபுரம் என், ஜெயசீலன் (வயது 23) கிளிநொச்சி. (இ-10)

## விளையாட்டரங்கு

### 17வயதுப் பிரிவு

## சென்.ஜோன்ஸ் வெற்றி

### கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஆரம்பம்

— விளையாட்டுச் செய்தியாளர் சண். ஜோண்சன் —

யாழ்ப்பாணம், ஜூன் 8

17வயதுக்கு உட்பட்ட பாடசாலை கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டி நேற்று ஆரம்பமானது.

இச்சுற்றுப் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

இந்த அணி மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை 9 விக்கெட்டுக்களால் தோற்கடித்தது.

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்த அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 78 ஓட்டங்களைப் பெற்றது.

எஸ் துஷ்யந்தன் 30 ஓட்டங்களைப் பெற்றார்.

ரி அகிலன், டி ரவிராஜன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் ரி. ரமேஷ், என். ரகுராம், ரி சஞ்சீவன் ஆகியோர் தலா 1விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் அணி 7 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 131ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது

எஸ். என். புவனரத்தினம் 21 ஓட்டங்களையும், பி. ரவிராஜன் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

ராகவன் 4 விக்கெட்டுக்களையும் பி. லவீந்திரா ஐ. ரமேஷ்குமார் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்.

இரண்டாவது இன்னிங்ஸிற்காக தொடர்ந்து துடுபெடுத் தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 84 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது.

லவீந்திரா 20 ஓட்டங்களைப்பெற்றார்.

பி. ரவிராகவன் சிறப்பாக பந்து வீசி 7 விக்கெட்டுக்களையும் என். ரகுராம் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

ஆட்டத்தில் வெற்றி பெற 35 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் துடுப்பெடுத்தாடிய சென் ஜோன்ஸ் அணி ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 35 ஓட்டங்களைப் பெற்றது.

எஸ். என் புவனரத்தினம் எஸ் சதீசன் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 20, 11 ஓட்டங்களைப்பெற்றனர்.

சென்.ஜோன்ஸ் அணியின் ஒரு விக்கெட்டை சத்தியராஜன் கைப்பற்றினார்.

இந்தப்போட்டிக்கு டி. வேதாபரணம், சத்தியநாதன் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர். (இ-7)

### விளையாட்டு விழா

## முல்லைத்தீவு அணி முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டு விழாவில் முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு சாம்பியனானது.

உதைபந்தாட்டம் வலைபந்தாட்டம், கரபந்தாட்டம், எல்லே போட்டிகளில் முன்னணியில் திகழ்ந்த முல்லைத்தீவு மாவட்ட அணிகள் புள்ளி அடிப்படையில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டன.

அங்கு நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளிலும் முல்லைத்தீவு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணியே 116 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.

66 புள்ளிகளைப் பெற்ற துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு இரண்டாம் இடத்தையும் -

பாண்டியன்குளம்உதவி அரசாங்க அதிபர் பிரிவு 53 புள்ளிகளைப் பெற்று மூன்றும் இடத்தையும் பெற்றன.

பாண்டியன் குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணியைச் சேர்ந்த ப. குலநாதன் 6 அடி 1 அங்குலம் உயரம் பாய்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டினார்.

முல்லைத்திவு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த எஸ் யோகதாஸ் 100 மீற்றர் தூரத்தை 11.3 செக்கனில் ஓடிமுடித்தார்

இவர்கள் இருவரும் இப்போட்டியின் சிறப்பு வீரர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

அங்கு நடந்த மரதன் ஓட்டப் போட்டியில் முல்லைத்தீவு உதவி அரச அதிபர் அணியைச் சேர்ந்த ஏ ஜோசப்மேரி முதலிடம் பெற்றார்.

ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் துணுக்காய் உதவி அரசாங்கஅதிபர் பிரிவு வீரர் ஆர். சுந்தரலிங்கமும் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியில் அதே பிரிவைச் சேர்ந்த செல்விஎன் ஜெயகௌரி முதலாமிடத்தையும் பெற்றனர்.

இந்த விழாவிற்கு பிரதம அதிதியாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அ. ஜெ செந்தில்நாதன் கலந்து கொண்டார்.

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. க. தேவசிகாமணி தலைமைவகித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. த நடராஜா இந்த போட்டிக்கான ஒழுங்குகளை சிறப்பாகச் செய்திருந்தார். (இ-7)

## பிரேஸில் வெற்றி

### உலகக் கிண்ண இரண்டாவது சுற்றில்

மெக்ஸிக்கோ, ஜூன் 7

13 ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாவது சுற்று ஆட்டம் ஒன்றில் பிரேஸில் அணி வெற்றி பெற்றது

இந்த அணி, அல்ஜீரிய அணியை 1—0 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது.

ஆரம்பம்முதல் இறுதி வரை விறுவிறுப்பாக நடைபெற்ற டி. பிரிவிற்கான இந்த ஆட்டத்தை லட்சக்கணக்கான மக்கள் நேரில்கண்டு களித்தனர்

வெள்ளியன்று நடைபெற்ற மற்றைய இரு ஆட்டங்களின் முடிவுகள்.

சி பிரிவு ஆட்டத்தில் கனடாவை ஹங்கேரி 2—0 என்ற கோல் அடிப்படையில் வென்றது.

எவ் பிரிவில் மொரோக்கோவுக்கும் இங்கிலாந்திற்கும் இடையில் நடைபெற்ற ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. (இ-7)

### 12, 13, இல்

## கடை அடைப்புக்கு வர்த்தக சங்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ் ஸ்டான்லி வீதி பொ சோமசுந்தரம் அன் கம்பனி, அசோசியேட்டட் மோட்டோர்ஸ் அன் எலெக்றிக்கல்ஸ், நாஷனல் மோட்டோர்ஸ் ஆகிய தாபனங்கள் தொடர்ந்து பூட்டப்பட்டு இருக்கும் விவகாரம் குறித்து ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக ஜூன் 12, 13, ஆம் திகதிகளில் பூரண கடையடைப்பு மேற்கொள்ள யாழ் வர்த்தகர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இத்தீர்மானம் 4 - 6 - 1986 இல் நடந்த சங்க ஆட்சிக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்த தாபனங்கள் தொடர்ந்தும் பூட்டப்பட்டுள்ள விவகாரம் சம்பந்தமாக சங்க உறுப்பினர்களின் வேதனை, வெறுப்பு, விரக்தியை சம்பந்தப் பட்டவர்களும் பொதுமக்களும் உணரவும் அதன் மூலம் சுமுகமான வழி பிறக்கவும் இந்த கடையடைப்பு உதவலாம் என்றும் தீர்மானத்தில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கையில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 8 - 06 - 1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd. ... Jaffna. Registered as a Newspaper at the General Post Office Sri Lanka unber number Q J 60 N 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org